**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANYAKUMARI AT NAGERCOIL.**

13.02.2025
C.O.S. No. 3/2024

P.W.1 திரு. சுரேஷ் குமார்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி தன்னாட்சி அதிகாரம் பெற்ற கல்லூாி என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட டெண்டரை கோாியது ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி என்றால் சரிதான். அது பேராயத்திற்கு உட்பட்ட கல்லூரி. கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளித்தது இந்த கல்லூரியின் Correspondent. அந்த கல்லூரியில் ரூபாய் 80,00,000/- மதிப்பிற்கு கட்டிட வேலை செய்ததாக சொல்வதற்கு ஆதரவாக என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக கட்டிட வேலைகள் செய்யும்போது Measurement Book பராமரித்து அதில் செய்யப்பபடும் வேலைகளின் அளவீடுகள் குறிக்கப்படும் என்றால் சரிதான். ஆனால் தற்போது புத்தகமாக இல்லாமல் கணினியில் Excel Sheet ல் பராமரித்து வருகிறோம். அந்த Excel Sheet ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு நான் எவ்வளவு வேலை செய்திருக்கிறேன் என பார்ப்பதற்கு வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்வதற்காக மனு தாக்கல் செய்தேனா என்றால்

இல்லை. தகுதி வாய்ந்த சுயேட்சையான பொறியாளர் மூலமாகவும் எவ்வளவு வேலை செய்துள்ளோம் என காட்டுவதற்கு எந்த அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் குறிப்பிட்டுள்ளபடி ரூபாய் 80,00,000/- மதிப்பிற்கு வேலை எதுவும் செய்யாததால்தான் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சுயேட்சை பொறியாளர் மூலமாக அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 25.09.2021 க்கு பிறகு இந்த பிரதிவாதிகள் வா.சா.ஆ. 1 ஆவணத்தின் சரத்து 3 ஐ மீறிவிட்டார்கள் என கூறி அறிவிப்பு எதுவும் நான் அனுப்பவில்லை என்றால் எழுத்து பூர்வமாக கொடுக்கவில்லை, வாய்மொழியாக கேட்டிருந்தேன். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள சரத்துகளை பிரதிவாதிகள் மீறவில்லை என்றாலும் நான்தான் வேலைக்கு போதிய ஆட்கள் இல்லாததால் கட்டிட வேலையை குறித்த முறையில், குறித்த நேரத்தில் முடிக்க தவறிவிட்டாலும் சரியல்ல. அவர்கள் எனக்கு சப்ளை செய்த சிமெண்ட் மற்றும் கம்பிக்கு எப்போது தொகை கொடுத்துள்ளார்கள் என்பதை பார்த்தாலே அவர்கள்தான் சரத்துகளை மீறியுள்ளார்கள் என்பது தொியவரும். நான் சிமெண்ட் மற்றும் கம்பியை உரிய நேரத்தில் சப்ளை செய்யாததால் கட்டிட வேலை தொடர முடியவில்லை என எழுத்து மூலமாக இந்த பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் எழுத்து மூலமாக கேட்கவில்லை. வாய்மொழியாக கேட்டேன். அவர்கள் காலதாமதம்படுத்தி சப்ளை செய்தார்கள். எனது கண்ஸ்டிரக்சன் கம்பெனியின் பெயர் S.K. Construction. வா.சா.ஆ. 7 ஆவணத்தில் உள்ள வவுச்சர்கள் அனைத்தும் எங்கள் கம்பெனியின் வவுச்சர்கள்தானா என்றால் ஆமாம். அந்த

வா.சா.ஆ. 7 ஆவணத்தில் உள்ள ரசீதிகளில் பிரதிவாதிகளின் பெயர்கள் எதுவுமே இல்லை என்றால் சரிதான். அவர்கள் பெயர் தேவையில்லை. வா.சா.ஆ. 8 ஆவணம் நகல்தான் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு கொடுத்த அசல் ஆவணத்தின் நகல். வா.சா.ஆ. 8 ஆவணத்தில் பிரதிவாதிகளுடைய கையொப்பமோ ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியின் Correspondent கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். அவர்கள் கையொப்பம் செய்து தரமாட்டார்கள். வா.சா.ஆ. 7 மற்றும் 8 ஆவணங்களை வைத்து ரூபாய் 80,00,000/- த்திற்கு கட்டிடம் கட்டியதாக துலங்காது என்றால் கட்டிடத்தை போய் பார்த்தால் தெரியும். வா.சா.ஆ. 9 ஆவணம் புகைப்படநகல் என்றால் சரிதான். நான்தான் கட்டிட வேலையை தன்னிச்சையாக நிறுத்தினேன் என்றாலும் பிரதிவாதிகள் அதற்கு காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. பலமுறை கேட்டும், பிரதிவாதிகள் பணமும், சிமெண்ட்டும் தராததால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 25.09.2021 க்கு பிறகு நான் அந்த கட்டிட வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். கட்டிட வேலை செய்யும் பணியில் 2004 ஆம் வருடத்திலிருந்து இருக்கிறேன். கட்டிட வேலை சம்பந்தமாக வேலையாட்களுக்கு ஊதியம் கொடுத்தது மற்றும் இதர கட்டுமான செலவுகள் செய்தது போன்ற கணக்கு விவரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. கணினியில் பராமரித்து வருகிறேன். அந்த ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தேவையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். M.Book ல் எவ்வளவு வேலை செய்யப்பட்டுள்ளது என்று எழுதி வா.சா.ஆ. 1 ஒப்பந்தத்தில் மற்ற தரப்பினரிடம் கையொப்பம் வாங்குவது கட்டாயம் என்றால் சரிதான். பிரதிவாதிகளிடமிருந்து எந்த தொகையும் பெற எனக்கு அருகதை இல்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. ரூபாய் 20,14,781/- இந்த பிரதிவாதிகள் கொடுக்க கடமைபட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் எதிலும் எனக்கு கோரியுள்ள வட்டி கிடைக்கத்தக்கதாக துலங்கவில்லை என்றால் சரியல்ல. நான் தவறான ஆவணங்கள் வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.